Orientation to Ontario

# இனவாத எதிர்ப்பு

கனடா என்பத காலனித்தவம், கடிவரவு என்பவற்றில் ஸ்தாபிக்கப்பட்ட ஒர நாட ஆகம். இந்நாட உலகிலே மிகவும் வறேபட்ட மக்களை உள்ளடக்கிய ஒர நாடாக அறியப்படகிறத. தனிநபர்களினதம் கலாசாரங்களினதம் இந்தப் பல்வண்ண அமைப்பு மனித உறவுகளக்கான தனித்தவமான, பரிணாமமடைகின்ற சவால்களை வளிப்படத்தகின்றத.

ஒன்ராறியவ◌ோவிலும் கனடாவிலும் இனரீதியான பாரபட்சமம் இனவாதமம் நீடித்தக் காணப்படகின்றன. இந்த உண்மை, இனவாதத்தையும் இனரீதியான பாரபட்சத்தையும் வினைத்திறன்மிக்க மறையில் விளித்தரைப்பதற்கான ஒரஆரம்பப் புள்ளியாக ஏற்றக்க◌ொள்ளப்படல் வணேடம்.

## இனவாதம்

இனவாதம் என்பத ஒர கழவினர் மற்றவர்களை விட இயல்பாகவே மலோனவர்கள் என்ற நரேடியாகவ◌ோ மறைமகமாகவ◌ோ வலிந்த கூறகின்ற ஒர கரத்தியல் ஆகம். இத எதிர்மறையான நம்பிக்கைகள், ஊகங்கள், நடவடிக்கைகள் என்பவற்றில் அடிக்கடி வளிப்படகிறத. இத இனமயமாக்கப்பட்ட கணவியல்புகளின் காரணமாக மக்களை ஒடக்கி அவர்களைக் கீழ்நிலைப்படத்தகிறத, மலேம் இதற்கச் சமூக, ப◌ொரளாதார, அரசியல், கலாசார வாழ்க்கையில் ஒர ஆழ்ந்த தாக்கம் காணப்படகிறத. இனரீதியான பாரபட்சத்தைப் ஊக்கவிப்பதில் இத பாரிய வகிபாகத்தை ஆற்றகிறத.

இனவாதம் பல மட்டங்களில் சயெற்படகிறத: கறிப்பாக அல்லத தனிப்பட்ட ரீதியாக, நிறவன அல்லத அமைப்பு ரீதியாக, சமூக மட்டமாக. இத அமைப்புசார் அல்லத நிறவனம்சார் கட்டமைப்புகளிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும், அதவே ப◌ோல் தனிநபர் சிந்தனை அல்லத நடத்தைக் க◌ோலங்களிலும் தளிவாகக் காணக்கூடியதாக இரக்கலாம்.

## இனமயமாக்கம்

இனமயமாக்கம் என்பத “சமூகங்கள் இனங்களைப் ப◌ொரளாதார, அரசியல், சமூக வாழ்க்கைக்கத் தாக்கம் சலெத்தம் வழிகளில் யதார்த்தமான, வறேபட்ட, சமமற்ற வழிகளில் உரவாக்கம் சயென்மறை” என்ற கறிப்பிடப்படகிறத.

இன வகைப்பாடகள் என்பன வலியுறத்திக் கூறவதற்கச் சமூகம் தரிெவு சய்ெதிரக்கின்ற வறேபாடகள், திட்டவட்டமான பண்புகள், இயல்புகள் என்பவற்றை அடிப்படையாகக் க◌ொண்டவை. பளெதிக பண்புக்கூறகளக்க மலேதிகமாக, ப◌ொதவாக இனமயமாக்கப்படகின்ற மக்களின் கணவியல்புகளில் அடங்கவன: பசேம் மறை அல்லத

1-855-626-0002
https://orientationontario.ca

Funded by / Financé par :

Ontario

Immigration, Refugees and Citizenship Canada

Immigration, Réfugiés et Citoyenneté Canada

உச்சரிப்பு முறை, பெயர், ஆடை அணியும் விதமும் தன்னைச் சீர்படுத்திக்கொள்ளும் விதமும், உணவுப்பழக்கம், நம்பிக்கைகளும் நடைமுறைகளும், ஓய்வுநேர முன்னுரிமைகள், பூர்வீக இடங்கள், குடியுரிமை

### உங்களுக்குத் தெரியுமா?

**இனவாதத்தைப் பற்றிக் கலந்துரையாடுகையில், சமூகத்தில் அல்லது தரப்பட்ட ஒரு சூழலில் ஆதிக்கமுள்ள குழுவின் உறுப்பினர்களுக்காகக் காணப்படுகின்ற உழைத்து ஈட்டாத சலுகைகள், நன்மைகள், அனுகூலங்கள், பிரவேசம் மற்றும்/ அல்லது வாய்ப்புகள் ஆகியவற்றைக் கருத்திற் கொள்வது அவசியமாகும். இந்தக் கருத்து பெரும்பாலும் “வெள்ளையினச் சலுகை” என்று பெயரிடப்படுகிறது.**

**இனரீதியான பாரபட்சம்** என்பது ஒரு நபரின் இனத்தை அடிப்படையாகக் கொண்ட, உள்நோக்குடைய அல்லது உள்நோக்கற்ற ஏதேனும் வேறுபடுத்தல், நடத்துகை அல்லது நடவடிக்கை ஆகும், இது ஒரு தனிநபரின் மீது அல்லது குழுவினரின் மீது சுமைகளைச் சுமத்துவதன் விளைவைக் கொண்டிருப்பதோடு, ஏனையோர் மீது சுமத்தப்படாததாகக் காணப்படுகிறது, அல்லது இது சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகளுக்கான பிரவேசத்தை ஒரு நபருக்குத் தடுத்து நிறுத்துகிறது அல்லது மட்டுப்படுத்துகிறது.

### இனவாதத்திற்கான நாளாந்த அனுபவங்கள்

இனவாதத்தின் நாளாந்த அனுபவங்களின் உதாரணங்களில் அடங்குவன:

- பேச்சு: ஆபிரிக்கக் கனடிய வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போது, ஒரு விற்பனை எழுதுனர் நயமற்ற, முரட்டுத்தனமான அல்லது நக்கலான குரல் தொனியைப் பயன்படுத்துகிறார்.
- மேலோட்டப் பார்வைகள்: 9/11-க்குப் பிறகு கனடிய முஸ்லிம் குடும்பத்துக்கு அவமதிப்புப் பார்வைகள் பார்க்கப்படுகின்றன.
- செயல்கள்: ஒரு சீனக் கனடியர் பேருந்தில் ஒரு இருக்கையில் அமர்கின்ற போது, பயணிகள் அருகில் உள்ள இருக்கையிலிருந்து எழுந்து செல்கின்றனர்.

### இனவாத எதிர்ப்பு

இனவாதம் மனித உரிமைகளை மீறுகிறது, மனித மாண்பைக் குறைக்கிறது, அத்துடன் ஜனநாயகத்தைச் சிதைக்கிறது. நீங்கள் இனவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், உங்களுடைய நடவடிக்கையின்மை இனவாதத்துக்கான அடையாளமாக மாறும்.

இனவாத எதிர்ப்பு என்பது இனச் சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடுவதற்கும், சமமற்ற அதிகார இயக்காற்றலைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் குழுக்களுக்கும் கட்டமைப்புகளுக்கும் மத்தியில் எதிர்த்து நிற்பதற்கும் ஆக்கபூர்வமான படிமுறைகளை எடுப்பதாகும். இது கட்டமைப்புகள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து அவை அனைவருக்கும் நியாயமான விதத்திலும் சரிசமமான விதத்திலும் இருப்பதை உறுதிசெய்வதை உள்ளடக்குகிறது.

இனவாதியாக இல்லாமல் இருப்பது மட்டும் போதுமானதல்ல. இனவாதி அல்ல என்பதற்கு எதிரானது இனவாதத்திற்கெதிரானவர் ஆகும்.

### இனரீதியான பாரபட்சத்தைத் தெரிவிக்கவும்

உங்களிடம் கேள்விகள் இருந்தால், அல்லது உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து தொடர்புகொள்ளவும்:

நீங்கள் இன அடிப்படையிலான பாரபட்சத்தை அல்லது துன்புறுத்தலை அனுபவித்திருக்கின்றீர் என்று கருதினால், Human Rights Tribunal of Ontario (ஒன்ராறியோவின் மனித உரிமைகள்



நியாயசபை) ஐ tribunalsontario.ca இல் அல்லது 1-866-598-0322 இல் தயவுசெய்து தொடர்பு கொள்க

உங்களுக்கு சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், Human Rights Legal Support Centre (மனித உரிமைகள் சட்ட ஆதரவு நிலையம்) ஐ hrlsc.on.ca இல் அல்லது 1-866-625-5179 இல் தொடர்பு கொள்க

**வளங்கள்:**

- **Ontario Human Rights Commission: ohrc.ca/en/racial-discrimination-race-and-racism-fact-sheet**
- **The Canadian Charter of Rights and Freedoms: justice.gc.ca**
- **Human Rights Legal Support Centre: hrlsc.on.ca or 1-866-625-51**
- **Federal Anti-Racism Secretariat: canada.ca/en/canadian-heritage/campaigns/federal-anti-racism-secretariat.html**
- **Canadian Heritage: canada.ca/en/canadian-heritage/campaigns/anti-racism-engagement/resources.html**
- **Anti-Racism Directorate: ontario.ca/page/anti-racism-directorate**
- **How to be an antiracist by Ibram X. Ken**

ஒன்ராறியோவில் இன அடிப்படையிலான பாரபட்சம், ஏனைய மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான கொள்கைகளும் வழிகாட்டுதல்களும் பற்றிய தகவல்களுக்கு, Ontario Human Rights Commission (ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணைக்குழு) ஐ ohrc.on.ca இல் தொடர்பு கொள்க

நீங்கள் ஒரு குற்றத்தினால் பாதிக்கப்பட்டவராக இருக்கிறீர்கள் என்றால்:

பாதிக்கப்பட்டவர் சேவைகள் விபரத்திரட்டை ovss.findhelp.ca இல் பார்வையிடுக

கிரேட்டர் ரொறன்ரோ பகுதியில் ஒரு தகவல், பரிந்துரை உளவளத்துணை ஆலோசகருடன் கதைப்பதற்கு Victim Support Line (பாதிக்கப்பட்டவர் ஆதரவு அழைப்பு) ஐ 1-888-579-2888 இல் அல்லது 416-314-2447 இல் தொடர்பு கொள்க.

வெறுப்புக் குற்றத்தைத் தெரிவிப்பதற்கு, உங்களுடைய உள்ளூர் பொலிஸ் அதிகாரசபைகளை அழைக்கவும்.

## உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்குமான கனேடிய சாசனம்

இச்சாசனம் இனம், தேசியம் அல்லது இனப் பூர்வீகம், நிறம், மதம், பால், வயது அல்லது உள அல்லது உடல் இயலாமை ஆகியவற்றின் அடிப்படையில் பாரபட்சம் இல்லாமல் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் சமமான பலனுக்குமான உரிமையைப் பாதுகாக்கிறது. Department of Justice (நீதித் திணைக்களம்) இல் சாசனம் பற்றி: justice.gc.ca இல் அல்லது findlink.at/constiacts இல் அறிந்துகொள்க

## ஒன்ராறியோ மனித உரிமைகள் சட்டக்கோவை

ஒன்ராறியோவில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் வேலைவாய்ப்பு, சேவைகள், பொருட்கள், வசதிகள், வீட்டுத் தங்குமிட வசதி, ஒப்பந்தங்கள், அத்துடன் வர்த்தக, தொழில்சார் சங்கங்களில் உறுப்புரிமை ஆகிய சமூகப் பகுதிகளில் இனரீதியான பாரபட்சத்திலிருந்தும் தன்புறத்தலிலிருந்தும் சுதந்திரமானவராக இருப்பதற்கு உரிமை உண்டு. சட்டக் கோவையில் இனம் என்பது பாரபட்சத்துக்கான தடை செய்யப்பட்ட ஒரு காரணமாகும், அத்துடன்  இனவாதம், இனரீதியான பாரபட்சம் ஆகியவற்றின் கலந்துரையாடலில் இனம் ஒரு முக்கிய இடத்தைத் தொடர்ந்து வகிக்கிறது.

ஒன்ராறியோவில் மனித உரிமைகள் பற்றி Ontario Human Rights Commission (ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணைக்குழு), ohrc.on.ca இன் மூலம் மேலும் அறிந்து கொள்க

## முக்கியமான வரைவிலக்கணங்கள்

இனவாதி -  ஒரு இனவாதக் கொள்கையைத் தனது நடவடிக்கைகள் அல்லது நடவடிக்கையின்மை அல்லது ஒரு இனவாதக் கருத்தை வெளிப்படுத்துவதன் ஊடாக ஆதரிப்பவர்.

இனவாதத்திற்கெதிரானவர் - ஒரு இனவாதத்திற்கெதிரான கொள்கையைத் தனது நடவடிக்கைகள் அல்லது இனவாதத்திற்கெதிரான கருத்தை வெளிப்படுத்துவதன் ஊடாக ஆதரிப்பவர்.

இனவாதம் - இனம்சார் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி அவற்றைச் சாதாரணமாக்குகின்ற இனவாதக் கொள்கைகளினதும் இனவாதக் கருத்துக்களினதும் முறையான செயன்முறை.

இனவாத எதிர்ப்பு - இனச் சமத்துவத்திற்கு வழிவகுக்கின்ற, இனவாதத்திற்கெதிரான கருத்துக்கள் மூலம் ஆதாரத்துடன் நிறுவுகின்ற இனவாதத்திற்கெதிரான கொள்கைகளின் ஒரு சக்திவாய்ந்த தொகுப்பு. மூலம்: இப்ராம் X. கெண்டி எழுதிய How to be an antiracist (ஒரு இனவெறி எதிர்ப்பாளராக இருப்பது எப்படி)

